# அறிவியலும் அதன் வளர்ச்சியும்

NAME : S.SUGANTHI

CLASS : I YEAR

BRANCH : C.TECH

ROLL NO. : 16727

TOPIC : அறிவியலும் அதன் வளர்ச்சியும்

COLLEGE : ARASAN GANESAN POLYTECHNIC COLLEGE

* ★ முன்னுரை
* ★ அறிவியலும் அதன் வரலாறும்
* ★ அறிவியல் புது வளர்ச்சி
* ★ சமூக அமைப்பு
* ★ முடிவுரை



# அறிவியலும் அதன் வளர்ச்சியும்

## முன்னுரை:

தகவல் சாதனங்களில் வளர்ச்சி நமது கலாச்சாரத்தின் மாண்பையும் மதிப்பையும் எடுத்துக் கொண்டு வருகிறது. அதிநவீன சூழ்நிலைகளில் அதில் உள்ள நன்மைகளை அதிகரித்து கொள்வதை விட அநாகரிகமான செயல்களை சித்தரிப்பனவற்றில் மதி மயங்கி தங்களின் காலத்தையும் நேரத்தையும், ஏன் தங்களின் எதிர்காலத்தையும் அழித்துக் கொள்கின்றனர் இன்றைய இளம் பருவத்தினர். ஊடகங்களின் தாக்கம் ஒருபுறம், குடும்பத்தினர் தரும் அதிக சுதந்திரம் மறுபுறம். இவற்றுக்கு இடையே இறை நம்பிக்கை மங்கிப்போய்க் கொண்டிருப்பது பலருக்கு இன்னும் புரியாமலே இருக்கிறது.

## அறிவியலும் அதன் வரலாறும்:

இன்றைய நிலை வேறு, காமா கதிர்களிலிருந்து நானோ நுண்ணுக்க முறை கூட வரவர பழையதாகிவிட்டது. அறிவியல் என்பது காலத்துக்கு காலம் மாற்றங்களோடு வளர்ந்து கொண்டு போகும் ஒன்றென்பது விஞ்ஞானிகளின் கூற்று. அது உண்மையாகக் கூட இருக்கலாம். அறிவியலின் கண்டுபிடிப்புகள் மனித குலத்தின் உயிர் காக்கும் தேவைகளை அவ்வப்போது பூர்த்தி செய்து வருகின்றன. இதை யாரும் மறுக்க முடியாது. உதாரணமாக கடந்த காலங்களில் பல நூற்றாண்டுகளாக சுனாமியின் தாக்கம் இருந்திருப்பதற்கான வளர்ச்சி தகவலின்படி, கோடிக்கணக்கான மக்கள் பலியாகி இருக்கலாம் என்ற யூகங்களுக்கு இடம் தந்தது. ஆயினும் 2006–க்கு பிறகு பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதால் சுனாமி ஏற்படப் போகும் வாய்ப்பை முன்னதாக அறிந்து கொண்டு பல உயிர்களை காக்கும் யுக்திகளை நாம் பெற்றுவிட்டோம். இதற்கு, கதிரியக்கக் கரிம ஆய்வுகள் முக்கிய பங்காற்றுகின்றன. எவ்வளவு அதிர்வெண் கொண்ட பூகம்பங்கள் இதற்கு முன் ஏற்பட்டது என்பதை துல்லியமாக அறிந்து இனி எப்படி அதுபோன்ற இயற்கைப் பேரிடர்களில் இருந்து தப்பித்துக் கொள்ளலாம் என்பனவற்றை அறிவியல் தான் நமக்கு சொல்லித்தருகிறது. ஆனால், இந்த அறிவியல் சாதனைகள் ஒரு தனி நபர் முன்னேற்றத்துக்கு எப்படி உதவுகின்றன...? ஒரு நாடு மற்ற நாடுக்கு விடும் சவால், தனது விஞ்ஞானிகளையும் அவர்களின் சிறந்த கண்டுபிடிப்புகளையும் பறை சாற்றிக் கொள்வதே. இதனால் ஒரு நாட்டின் நன்மதிப்பு கூடுகிறது.

## அறிவியல் புது வளர்ச்சி:

தற்காப்புக்கென பல நவீன ஆயுதங்கள், வெளி உலக தொடர்புக்கான ஆராய்ச்சிகள், நோய்களை முன்கூட்டியே அறியும் திறன் போன்ற செயல்கள் நாட்டின் அறிவியல் வளர்ச்சியின் அளவுகோல். ஆயினும் பலவித புதுமையான கண்டுபிடிப்புகளின் வழியே நாடு சிறக்குமே தவிர நம் குடும்பமும் சமூகமும் சிறக்க இது போன்ற கண்டுபிடிப்புகள் காரணமாக இருக்க முடியாது. இவை நம் வாழ்வுக்கு ஒத்தாசையாக வருவனவே. அப்படியானால் அறிவியல் வளர்ச்சி நமக்கு பாதகமானதா? சரியாக, முறையான வகையில் பயன்படுத்தும் நெறிகளை மீறிடும் போது, அவை ஆக்க சக்தியாக முடியாது.... அழிக்கும் சக்தியே... முந்தைய காலத்தில் தகவல் பரிமாற்றம் என்பது கட்டுப்படுத்தப்பட்ட ஒன்றாகவே இருந்தது. நாட்டு மக்கள் எதை எல்லாம் கேட்க வேண்டும் என செய்திகளை பிரித்து மக்களுக்குச் சென்றடைய அரசாங்கம் தகவல் துறையின் மூலம் ஏற்பாடும் செய்திருந்தது. பத்திரிக்கைகள் படிப்போரும் மிகக் குறைவு. வானொலியில் வெளிவருவதை கவனிக்க ஒரு குழுவும் இருந்தது. ஆக, உலகில் வேறு எங்கு தவறான செய்கைகள் இருந்தாலும் அவை ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்கு செய்கைகள் இருந்தாலும் வருவதை தடுத்து நிறுத்தவோ, கட்டுப்படுத்தவோ

முடிந்தது. செய்கை மழை 1960–ம் ஆண்டுகளில் பெரும் பிரபலமான ஒன்றாக இருந்தது. உப்புத் துகள்களை பனிபோல மேகங்களிடம் தூவி, அதன் குளிர்ச்சியினால் பெய்த மழையினை செயற்கை மழை என பெருமைப்பட்டுக் கொண்டோம்.

## சமூக அமைப்பு:

அறிவியல் வளர்ச்சி எனும் பார்வையில் தொடர்புத்துறை முன்னேற்றம் அடைந்து விட்ட இந்த நாட்களில், நல்லதை விட தீயன பற்றிய செய்திகளை தடுக்கும் சந்தர்ப்பங்கள் இன்று அரசாங்கத்துக்கு கூட இல்லை என்னும் நிலையாகி விட்டது. இதைத் தான் நாம் கவனமுடன் கையாள வேண்டும் என்கிறோம். நமது இளைஞர்கள் மிக மிக விழிப்புடன் செயல்படக்கூடிய சூழ்நிலை இன்று உருவாகி விட்டது. புதுமையை விளங்கிக் கொள்ளுதலில் தவறு நேரும் போது அது அவர்களின் வாழ்க்கையை பாதிக்கிறது. மலேசியா நாட்டில் தினமும் 18 வயதுக்கும் குறைவானோர் காணாமல் போகும் எண்ணிக்கை 15 ஆகும். இதில் இந்தியர்களின் எண்ணிக்கை 6 ஆகும். சமூக அமைப்புகள் இணையத்தையும், தனிப்பட்டவரின் ஒழுக்க நெறிகளையும் இங்கு முன் வைக்கின்றன. கற்கும் வயதில் நம் இளைஞர்கள் கத்தியைத் தூக்குவது அதிரும் வகையில் பெருகி வருகிறது.

## முடிவுரை:

இதிலிருந்து என்ன தான் வழி என பலரும் தேடிக் கொண்டு இருக்கிறார்கள். உடனடியாக நம் நினைவுக்கு வருவது இறை நம்பிக்கை மட்டுமே, மற்ற மாற்றங்கள் பின்னர் வரும் போது பார்த்துக் கொள்ளலாம். ஆயினும் இன்றே மற்ற மாற்றங்களின் விழிப்பு நிலையை நாம் இளையோருக்கு காட்ட வேண்டியிருப்பதால் இறை நம்பிக்கையைத் தவிர உடனடி தீர்வாக நமக்கு வருவது வேறொன்றும் இல்லை. எந்த நிலையில் யாருடன் இருந்தாலும் அல்லது யாருடனும் இல்லாது தனித்திருந்தாலும், ஒருவரை ஒழுக்கமுடன் வழி நடத்திச் செல்வது இறையருளே அன்றி, அதன் அடிப்படை நம் சமூக மக்களின் ஒவ்வொரு குடும்பங்களிலும் இருந்தது. தொன்றுதொட்டு, குடும்பம் குடும்பமாக வழிவழியாக இறைவனை வணங்கி வாழும் நேரான சிந்தனை நிலை அனைவருக்கும் இருந்தது. மொத்த மக்களில் தவறு செய்வோர் எண்ணிக்கை அவ்வளவாக இல்லை என்றே படித்திருக்கிறோம். அதுமட்டுமல்ல. அன்று இருந்தோரும், வெளியிடப்பட்ட புத்தகங்களும் நல்லொழுக்கமும் எடுத்துச் சொல்லி வந்தன. அதனால் நல்லதை பின்பற்றுவோர் குறைவில்லாமல் இருந்தனர்.